09.02.2026



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.56/2014**

**பி.வா.சா. 1–கண்ணதாசன், த/பெ.பெருமாள்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கில் 7ம் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்த இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்தை நான் ஆனந்தகுமார் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். அந்த ஆனந்தகுமார் தான் இந்த வழக்கின் 6ம் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். தாவா வழக்கு அனைத்து விவரங்களும் எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரிதான். 6ம் பிரதிவாதி ஆனந்தகுமாரிடம் தாவா சொத்தை பொறுத்து அனைத்து விவரங்களையும் கேட்டு தெரிந்து கொண்ட பிறகு தான் நான் கிரையம் பெற்றேன் என்று சொன்னால் சரிதான்.

நானும், வாதிகளும் மற்றும் 6ம் பிரதிவாதியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். 45 ஆண்டு காலமாக மருவத்தூரில் நான் வசித்து வருகிறேன். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் மருவத்தூர். 1ம்

09.02.2026



வாதி மற்றும் அவருடைய தகப்பனார் ஆகியோரின் விவரங்கள் எனக்கு தெரியும். 3 மகன்கள் 1ம் வாதிக்கு உண்டு. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.10 வம்சாவளி கொடிப்பட்டியலில் 1ம் வாதிக்கு நான் சாட்சியம் அளித்தவாறு 3 மகன்களின் பெயர்களை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன், 1ம் வாதிக்கு 4 மகன்கள் இதில் 1 மகன் இறந்துவிட்டார், தற்போது 3 மகன்கள் தான் உயிரோடு உள்ளார் என்றால் சரிதான்.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.